**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 185 of 2019**

Prosecution witness LW12 (PW9) Chief

Solemnly affirmed sworn by **Tmt.P.Sangeetha** Grade–I B.C., on date 12.02.2026 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.தண்டபாணி | Father Name | : | திரு.எம்.சுந்தர்ராஜன் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused :A1 to A3 Present.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது ஒசூர் தாலுக்கா , முத்தாலி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். 2012 வருடம் மத்திகிரி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். அதே சமயத்தில் என்னுடன் மத்திகிரி கிராம உதவியாளராக பசவராஜ் பணிபுரிதார். 21.02.2018 ம் தேதி காலை 6.45 மணி அளவில் அலுவலக பணிக்காக பயிர் ஆய்வு பணியில் இருந்தபோது மத்திரிகிரி வட்ட ஆய்வாளர் எனக்கு போன் செய்தார் . குற்ற எண். 55/2018 வழக்கு சம்பந்தமாக எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலம் வாங்க வேண்டும் என்று என்னை மத்திரிகிரி காவல் நிலையத்திற்கு வரும்படி சொன்னார் , நானும், கிராம உதவியாளர் பசவராஜும் மத்திரிகிரி காவல் நிலையத்திற்கு சுமார் 10 நிமிடத்திற்கு எல்லாம் போய்விட்டோம்.

அங்கு அல்லேலப்பா மகன் கோபால் , அஸ்வந்தப்பா மகன் சேகர் , வெங்கடசாமி ரெட்டி மகன் மகேந்திரகுமார் ஆகியோர் விசாரணை கைதிகளாக அங்கு இருந்தார்கள். மூன்று பேரும் தானாக முன்வந்து ஒப்புதல்

வாக்குமூலம் கொடுத்தார்கள் , முதலில் கோபால் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார், இரண்டாவதாக சேகர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் , மூன்றாவதாக மகேந்திரகுமார் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் . தற்போது ஆஜரில் இருக்கும் கோபால் , சேகர் , மகேந்திரகுமார் ஆகியோர் தான் அன்றைய தினம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த நபர்கள் ஆவார்கள் . பொம்மாண்டபள்ளி கிராமத்தை சேர்ந்த அல்லேலப்பா மகன் முருகேஷ் கொலை செய்தது சம்பந்தமாக வாக்குமூலம் கொடுத்தார்கள் . அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் ஆய்வாளர் கையெழுத்து போட்டார் , நானும் என்னுடைய கிராம உதவியாளரும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியாக கையெழுத்து போட்டோம்.

தற்போது காண்பிக்கப்படும் கோபால் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது தான் . அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **Ex.P.10** ஆகும். அதேபோல் சேகர் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது தான் .அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **Ex.P.11** ஆகும். அதேபோல் மகேந்திரகுமார் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது தான் .அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **Ex.P.12** ஆகும். ஒப்புதல் வாக்குமூலம் பெற்றபிறகு நான் , இன்ஸ்பெக்டர், என்னுடைய உதவியாளர் மற்றும் எதிரிகள் மூன்று பேரையும் அழைத்துக்கொண்ட பொம்மாண்டபள்ளி ஹரிஷ் கார் ஷெட் அருகே ஒரு டுவீலர் அதன் பதிவு எண். TN-70M-1073 அப்பாச்சி வண்டி , சிவப்பு நிறம்

கொண்ட வண்டியை கோபால் அடையாளம் காட்ட அதனை ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார் அதில் நானும் என்னுடைய உதவியாளரும் சாட்சி கையெழுத்து போட்டோம்.

தற்போது காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது தான் . கைப்பற்றுதல் மகஜர் **Ex.P.13** ஆகும். மேற்படி TN-70M-1073 அப்பாச்சி வண்டி **Mo.1** ஆகும். பொம்மாண்டபள்ளி ஏரிக்கு சுமார் 1.00 க்கு இன்ஸ்பெக்டர் , நான் மற்றும் உதவியாளர் மற்றும் மூன்று எதிரிகளும் போனபோது குற்றவாளிகள் அடையாளம் காட்ட மரம் வெட்டும் கொடுவாள் ஒன்று , பேன்ட் , ஷர்ட் , ஒன்று டி -ஷர்ட் , அது ஜீன்ஸ் பேன்டாகும் அதில் இரத்த கரை படிந்திருந்தது. அந்த இடத்தில் இருந்து மொத்தம் இரண்டு ஜீன்ஸ் பேன்ட் , மூன்று டி -ஷர்டுகளை போலீசார் கைப்பற்றினார்கள் . அவ்வாறு கைப்பற்றும்போது நான் மற்றும் உதவியாளர் சாட்சியாக கையெழுத்து போட்டோம். மரம் வெட்டு கொடுவாள் **Mo.2** , இரண்டு ஜீன்ஸ் பேன்டுகள் முறையே **Mo.3** மற்றும் **Mo.4** . இரண்டு டி -ஷர்டுகள் முறையே **Mo.5** மற்றும் **Mo.6** ஆகும். இந்த பொருட்களை கைப்பற்றும் முன்பாகவே கொலை நடந்த இடத்தை போய் பார்வையிட்டோம்.

கொலை நடந்த இடத்தை எதிரிகள் அடையாளம் காட்டினார்கள் . அந்த இடத்தில் இருந்து மண் மாதிரிகளை போலீசார் எடுத்தார்கள். அவ்வாறு மண் மாதிரியை எடுத்தபோது என்னுடன் என்னுடைய உதவியாளர் , காவல் ஆய்வாளர் மற்றும் எதிரிகள் இருந்தார்கள். பகல் 1.00 மணிக்கு தயாரிக்கப்பட்ட கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது தான்.

அந்த கைப்பற்றுதல் மகஜர் **Ex.P. 14** ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

என்னை போலீசார் போன் மூலம் அழைத்த விவரத்தை , போலீசார் விசாரித்தபோது சொல்லி இருக்கிறேன். பயிராய்வில் இருந்தபோது போலீசார் என்னை அழைத்ததாக நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை . அந்த சமயத்தில் நான் நவதி என்ற இடத்தில் குடியிருந்தேன் . அந்த நவதி என்பது ஒன்னலவாடி ஊராட்சிக்கு உட்பட்டது என்று சொன்னால் சரிதான் . நான் பணிபுரியும் மத்திரிகிரி தனி ஊராட்சி என்று சொன்னால் சரிதான் . நான் பணிக்கு சேர்வதற்கு முன்பாக எங்களுக்கு பயிற்சி கொடுப்பார்கள் என்றால் சரிதான். வி.ஏ.ஓ –ஆக தனியாக Guideline உள்ளது என்றால் சரிதான். அந்த Guideline ல் விதி 100 படி எங்கள் கிராமத்தில் நடக்கும் நிகழ்வு குறித்து பதிவேட்டில் பதிவு செய்யவேண்டும் என்று சொன்னால் முன்னர் அதற்கு டைரி கொடுத்திருந்தார்கள் தற்போது அந்த டைரி கொடுப்பதில்லை . அந்த பதிவேடுகளை 15 நாளுக்கு ஒருமுறை தாசில்தாருக்கு தெரிவிக்க வேண்டும் என்று சொன்னால் அது தவறு.

பொதுவாக நான் அலுவலகத்திற்கு காலை 10 மணிக்கு போவேன் , சாயங்காலம் 5.00 மணிக்கு கிளம்புவேன். ஒவ்வொரு நாள் பணி சுமை பொறுத்து நான் கிளம்பும் நேரம் மாறும் . எந்த இடத்தில் பயிராய்வு செய்துக்கொண்டு இருந்தேன் என்ற விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. பயிராய்வு செய்த இடத்தில் இருந்து காவல்

நிலையம் எவ்வளவு தொலைவில் இருந்தது என்ற விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. அந்த பயிராய்வை நான் குருபட்டி என்ற இடத்தில் செய்துக்கொண்டு இருந்தேன். போலீசார் என்னை அழைத்தபோது நான் குருபட்டி கிராமத்தில் இருந்தேன் என்றால் சரிதான் . நான் காவல் நிலையத்திற்கு போனபோது காலை 7.00 மணி இருக்கும். காவல் நிலையத்திற்கு நான் போனபோது அங்கு இன்ஸ்பெக்டர் , காவலர்கள் , அதன் பிறகு எதிரிகள் அடையாளம் காட்டப்பட்டார்கள் . ஒப்புதல் வாக்குமூலம் எதிரிகளிடம் இருந்து எத்தனை மணிக்கு தொடங்கப்பட்டது , எத்தனை மணிக்கு முடிக்கப்பட்டது என்று சொன்னால் அந்த விவரங்கள் எனக்கு ஞாபகமில்லை.

எதிரிகளை அடையாளம் காட்டிய போது அவர்கள் என்ன உடை உடுத்தி இருந்தார்கள் என்ற விவரம் எனக்கு ஞாபகமில்லை . காவல் நிலையத்தில் சுமாராக நான் எவ்வளவு நேரம் இருந்தேன் என்று சொன்னால் சுமார் மூன்று மணி நேரம் இருந்தேன் . காவல் நிலையத்தில் வைத்து நான் எத்தனை கையெழுத்து போட்டேன் என்று சொன்னால் காவல் நிலையத்தில் வைத்து மொத்த நான்கு கையெழுத்துக்களை போட்டேன் . நான் காவல் நிலையத்திற்கு அடிக்கடி போலீசார் அழைக்கும்போது போவேன் என்று சொன்னால் சரிதான். நான் கையெழுத்து போட்டதாக சொல்லும் Ex.P. 10 , Ex.P.11 and Ex.P.12 ல் என்னுடைய அலுவலக முத்திரை என்னுடைய கையெழுத்துக்கு கீழ் பதிக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான் . நான் அரசு அலுவலர் என்பதால் நான் கையெழுத்து போடும்போது என் அலுவலக முத்திரையை நான் பதிக்க வேண்டியது என்னுடைய கடமை என்றால்

சரிதான். ஆனால் அன்றைய தினம் என்னுடைய அலுவலக முத்திரையை நான் பதிக்கவில்லை. நான் எந்த இடத்தில் கையெழுத்து போட்டாலும் சீல் இடவில்லை என்றால் அந்த இடத்தில் நான் வி .ஏ.ஓ என்று எழுதி, தேதி போடுவேன் என்றால் சரிதான் . மேற்படி **Ex.P.10 – EX.P.12** ஆவணத்தில் வி.ஏ.ஓ என்று எழுதி, தேதி போடவில்லை என்று சொன்னால் சரிதான். நான் பலமுறை நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரிதான் . தற்போது நான் 5 வது வழக்கில் சாட்சியம் அளித்துக்கொண்டு இருக்கிறேன் . ஏற்கனவே போலீசார் தயாரித்த ஆவணங்களில் நான் கையெழுத்துபோட்டுள்ளேன் என்றும் , என் முன்னிலையில் எதிரிகள் எந்த ஒப்புதல் வாக்குமூலத்தையும் கொடுக்கவில்லை என்றால் அது தவறு.

எங்கள் அலுவலகத்திற்கும் , காவல் நிலையத்திற்கும் சுமார் 300 மீ தொலைவு இருக்கும். உண்மையிலே காவல் நிலையத்தில் வைத்து அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து இருந்தால் அதில் கையெழுத்து போடும்போது நான் நடந்தே என் அலுவலகத்திற்கு சென்று அலுவலக முத்திரை எடுத்து வந்து , அலுவலக முத்திரையை பதித்திருப்பேன் என்று சொன்னால் அது தவறு . பொம்மாண்டபள்ளி என்னுடைய ஊராட்சிக்கு உட்படாத பகுதி என்று சொன்னால் நான் அந்த சமயத்தில் மத்திகிரியில் பொறுப்பு கிராம நிர்வாக அலுவலர், கொத்தகொண்டப்பள்ளியில் தான் நான் முதன்மை கிராம நிர்வாக அலுவலராக பொறுப்பில் இருந்தேன். மத்திகிரியில் நான் பொறுப்பு கிராம நிர்வாக அலுவலராக இருந்தேன் என்று நான் போலீசார் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் நான்

கொத்தகொண்டப்பள்ளி கிராம நிர்வாக அலுவலராக தான் பணிபுரிந்தேன் என்ற விவரத்தையும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான் . நான் எந்த ஊராட்சியில் பணிபுரிகிறேனோ அந்த ஊராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தான் வசிக்க வேண்டும் என்பது விதி என்றால் சரிதான் . ஆனால் அந்த சமயத்தில் பிள்ளைகள் படிப்பிற்காக வெளியே தங்கி இருந்தேன் . பொம்மாண்டபள்ளி ஹரிஷ் கார் ஷெடானது எந்த சர்வே எண்ணில் உள்ளது, பொம்மாண்டபள்ளியில் எந்த இடத்தில் உள்ளது என்ற விவரத்தை நான் போலீஸ் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் அது சரியல்ல.

நான் சொல்லி இருக்கிறேன். நான் அங்கு போகும்போது யார் யார் இருந்தார்கள் என்று சொன்னால் காவல் ஆய்வாளர், குற்றவாளிகள், இரண்டு காவலர்கள், நான் மற்றும் கிராம உதவியாளர் ஆகியோர் இருந்தோம் . அந்த ஹரிஷ் கார் ஷெடின் கேட்டை யார் திருந்தார்கள் என்பது ஞாபகமில்லை . ஹரிஷ் கார் ஷெட்டில் அந்த வண்டி எந்த இடத்தில் இருந்தது என்று நான் குறிப்பிட்டு போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான் . என் முன்னிலையில் அந்த வண்டியின் சாவியை யார் எடுத்து வந்து கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது . ஹரிஷ் கார் ஷெடில் என்ன என்ன வண்டிகள் இருந்தது என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் அந்த விவரமும் ஞாபகமில்லை . நான் அந்த ஹரிஷ் கார் ஷெடிற்கு ஏதும் போகவில்லை என்றும் , காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட மகஜரில் நான் கையெழுத்து மட்டும் போட்டுள்ளேன் என்று சொன்னால் அது தவறு. உண்மையிலே நான் ஹரிஷ் கார் ஷெடுக்கு போய்

இருந்தால் அந்த கேட்டை யார் திருந்தார் , அந்த வண்டியின் சாவியை யார் கொடுத்தார் என்ற விவரம் தெரிந்திருக்கும் என்று சொன்னால் அது தவறு . நான் சொல்லுவது போல் எந்த கைப்பற்றுதல் மகஜரிலும் என் கையெழுத்துக்கு கீழ் எந்த சீலும் போடவில்லை என்றும் , நான் யார் என்ற விவரமும் அந்த கையெழுத்துக்கு கீழே எழுதப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

கைப்பற்றுதல் மகஜரை எங்கு டைப் செய்தார்கள் என்று சொன்னால் அதனை கைப்பட எழுதினார்கள். நான் அரசு ஊழியர் என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் அந்த ஆவணங்களில் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் அது தவறு. பொம்மாண்டப்பள்ளி ஏரிக்கு பக்கத்தில் புதர் இருப்பதாக சொல்லும் பட்சத்தில் அந்த புதரானது எந்த திசையில் உள்ளது என்பது குறித்து நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் அது தவறு. அந்த விவரத்தை நான் சொல்லி இருக்கிறேன். அந்த புதரானது தெற்கு புறத்தில் அமைத்துள்ளது. அவ்வாறு புதர் தெற்கு புறத்தில் அமைந்துள்ளது என்று நான் போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான் . நான் சொன்ன பொம்மாண்டபள்ளியிலுள்ள ஏரியானது புறம்போக்கு நிலத்தில் உள்ளதா அல்லது பட்டா நிலத்தில் உள்ளதா என்றால் அந்த விவரம் ஞாபகத்தில் இல்லை. துணிகளை எடுத்துக்கொடுத்ததாக சொல்லும் கைப்பற்றுதல் மகஜர் மூன்று இடங்களில் அடித்து , திருத்தி எழுதப்பட்டடுள்ளது என்றால் சரிதான். என் முன்னிலையில் மரம் வெட்டும் கத்தி ஏதும் கைப்பற்றப்படவில்லை என்றும், கொடுவாள் தான் கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான். அந்த

கொடுவாளின் நீளம் , அகலம் ஏதும் எனக்கு தெரியாது என்று சொன்னால் ஞாபகமில்லை. எந்த இடத்திற்கும் நான் போகவில்லை என்றும், எந்த சான்று பொருட்களும் என் முன்னிலையில் கைப்பற்றபடவில்லை என்றும் , அனைத்து சான்று பொருட்களும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் அது தவறு.

போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இந்த வழக்கிற்காக காவல் நிலையத்தில் தயாரிக்கப்பட்ட அனைத்து ஆவணங்களிலும் நானும் , கிராம உதவியாளரும் கையெழுத்து போட்டுள்ளோம் என்று சொன்னால் அது சரியல்ல. எதிரிகளுக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியுமா என்ற விவரம் எனக்கு தெரியாது. எதிரிகள் தாங்கள் கொடுத்த வாக்குமூலத்தை ஏதும் படித்துப்பார்க்கவில்லை என்றால் சரிதான் . அந்த வாக்குமூலத்தை எதிரிகளிடம் படித்து காண்பித்து எதிரிகளிடம் கையெழுத்து வாங்கியதாக அந்த வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான் . இந்த எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் , இந்த வழக்கின் சான்று பொருட்களுக்கும் , எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்திற்கு போய் கையெழுத்து போட்டுவிட்டு , பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் அது தவறு.

<u>**மறுவிசாரணை: இல்லை**</u>

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.02.13 03:22:42 +0530